DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

CCNo. 611/2022 PW . 6

Name : கார்த்திக்		Fathers Name	: பாஸ்கரன்
Village:		Taluk	:
Age :		Occupation	:
Caste :		Religion	:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2024

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை:

நான் காரைக்குடியில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் மேனேஜராக பணி செய்துவருகிறேன். 2016ம் வருடம் நான் இன்டஸ் இன்ட் என்ற தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். 10.09.2016 அன்று எனது சொந்த வேலையாக சென்றிருந்தேன். அன்று இரவு 11 மணிக்கு மேல் எனது வீட்டிற்கு நான் சென்றுகொண்டிருந்தபோது பெரியார்சிலை சானாங்காளி கோவில் அருகில் கூட்டமாக இருந்தது. என்ன என்று பார்த்தபோது அன்றைய தினம் ஒரு நபரின் கழுத்தில் அணிந்திருந்த செயினை பறித்து சென்ற சம்பவம் குறித்து காரைக்குடி வடக்கு போலீசார் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம்தயார் செய்து பார்வைமகஜர் ஆவணம் தயார் செய்தார்கள். அந்த ஆவணத்தை படித்து பார்த்து சாட்சி கையொப்பம் செய்தேன். பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வைமகஜர் அதசாஆ. 2 ஆகும். போலீசார் இதுசம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தை படித்து பார்த்தேன். அதில் குறித்துக்கொண்ட குற்ற எண் தற்போது நினைவில் இல்லை. போலீசார் என்னை அதற்கு பிறகு விசாரிக்கவில்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அசா. 1 யார் என்று தெரியாது.

மறு விசாரணை: இல்லை